

# மலரின் நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காணிக்கை



மநு இல்லத்தின் மாசற்ற சோதியாய்
மகிழ்வுடன் அரவணைக்கும் பாசமிகு பிணைப்பாய்
அன்பும், பண்பும் குறையாத ஆழ்கடலாய் – அன்று
நம் நல்வாழ்விற்காக உன்னை கற்பூரமாக்கிய கலங்கரை விளக்கே!
என்றும் நீ எம்மைக் காத்திட கம்பனை அம்பாளுடன் கலந்துவிட்டாயோ
பரிகாரம் தேடும் எமக்கு இவ்வேடு எம் முதல் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”



மண்ணில்
29.06.1947

விண்ணில்
10.09.2017

அமரர்

# செல்வி அப்புத்துரை நிர்மலாதேவி

அவர்கள்

## திதி வெண்பா

சீர்பூத்த ஏவிளம்பி சிறப்புறு ஆவணி ஞாயிறுதனில்
பார்பூத்த பஞ்சமியும் கஞ்சடை பைரவன் பரணியில்
நேர்காத்த மநுவம்ச விதானை மகள் நிர்மலாதேவி
கார்பூத்த கம்பனை இராஜஇராஜேஸ்வரி கமலம் புகுந்தனளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடம்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
விடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகளின் வகுப்பு

| | திருமுறைகள் | பதிகம் | பாட்டு |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் தேவாரம் | 1 - 2 - 3 | 384 | 4147 |
| திருநாவுக்கரசர் தேவாரம் | 4 - 5 - 6 | 312 | 3066 |
| சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் | 7 | 100 | 1033 |
| மாணிக்கவாசகர் திருவாசகம் | 8 | --- | 656 |
| ” திருக்கோவையார் | 8 | --- | 400 |
| திருமாளிகைத்தேவர் முதல் திருவிசைப்பா | 9 | --- | 288 |
| திருசேதிராயர் ஈறாக திருப்பல்லாண்டு | 9 | --- | 13 |
| திருமூலநாயனார் திருமந்திரம் | 10 | --- | 3081 |
| திருவாலவாயுடையார் முதல் | 11 | --- | 1388 |
| திருநம்பியாண்டார் ஈறாக | 11 | --- | 1388 |
| சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் | 12 | --- | 18358 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

**இராகம்: கம்பீரநாட்டை** **பண்: நட்டபாடை**

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லாலர்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

**இராகம்: நவரோஜ்** **பண்: கொல்லி**

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

இராகம்: நவரோஜ் **பண்: கொல்லி**

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்: கேதாரகௌளை** **பண்: காந்தாரபஞ்சமம்**

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறையரனே.

**இராகம்: நவரோஜ்** **பண்: பியந்தைக்காந்தாரம்**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

**இராகம்: முல்லை** **பண்: மோகனம்**

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**இராகம்: முல்லை** **பண்: மோகனம்**

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன்விரையார் கழற்கு என்
கைகள் தான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்,
பொய்தான் தவிர்த்து,உன்னைப்போற்றி
சய சய போற்றி என்னும்,
கைதான் நெகிழ விடேன் உடையாய்!
என்னைக் கண்டு கொள்வேன்.

**இராகம்: முல்லை** **பண்: மோகனம்**

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: முல்லை

பண்: மோகனம்

அப்பனே! எனக்கு அமுதனே! ஆனந்தனே!
அகம் தொழ அன்றும் தேன்
ஒப்பனே! உனக்குரிய அன்பரில் உரியனுய்
உன்னைப் பருக நின்றோர்
துப்பனே! சுடர் முடியனே! துணையாளனே!
தொழுவார் மெய்ப்பனில்
வைப்பனே! எனை வைப்பதோ சொலாய்
நைய வையத்து எங்கள் மன்னனே!

இராகம்: முல்லை

பண்: மோகனம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

**இராகம்: ஆனந்தபைரவி** **பண்: ஆகிரி**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

**இராகம்: பஞ்சமம்** **பண்: ஆகிரி**

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

**இராகம்: பஞ்சமம்** **பண்: ஆகிரி**

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்: ஆனந்தபைரவி**

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்கனே பெரிய நீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
பிரிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மால் அறியா ஒருவனும் இருவா
முக்கண்ணா நாற்பெருந் தடத் தோன்
கன்னலே தேனே அமுதமே
கங்கை கொண்ட கோனேச்சரத்தானே.

**இராகம்: பஞ்சமம்** **பண்: ஆகிரி**

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடை திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

இராகம்: ஆனந்தபைரவி பண்: ஆகிரி

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்: ஆனந்தபைரவி** **பண்: ஆகிரி**

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்(கு)ஆம்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

**இராகம்: ஆனந்தபைரவி** **பண்: ஆகிரி**

சொல்லாண்டசுரு திருப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிறை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரன் மேரு விடங்கன்
விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

**இராகம்: ஆனந்தபைரவி** **பண்: ஆகிரி**

ஆரார் வந்தார்? அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்:ஆனந்தபைரவி பண்: ஆகிரி

தாதையைத் தாளற வீசிய சண்டிக்(கு)
இவ் அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இராகம்: செந்துருத்தி பண்: மத்தியமாவதி

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இராகம்: செந்துருத்தி பண்: மத்தியமாவதி

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்: செந்துருத்தி** **பண்: மத்தியமாவதி**

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

**இராகம்: செந்துருத்தி** **பண்: மத்தியமாவதி**

திருவும் கல்வியும் சீரும் தளைக்கவும்
கருணை பூக்கவும் திசையக் காய்க்கவும்
பருவாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப்பேணுவோம்!

**இராகம்: செந்துருத்தி** **பண்: மத்தியமாவதி**

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய.

## திருப்புகழ்

**இராகம்:ஆனந்தபைரபி** **தாளம் ஆதி**

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்:ஆனந்தபைரபி** **தாளம் ஆதி**

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமம் பெருமாளே.

**இராகம்: பாகேஸ்வரி** **தாளம் :கண்டசாப்பு**

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகம்:ஆனந்தபைரபி** **தாளம் ஆதி**

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

**இராகம்:சக்கரவாதம்** **தாளம் கண்டஜைம்பை**

அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேசமந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனே
இபமா முகந்தனைக்கு இளையோனே
இமவான் மடந்தை உத்தமிபாலா
ஜெபமாலை தந்த சற்குருநாதா
திரு அவிநன்குடிப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்.

மூவிரு முகங்கள் போற்றி! முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈர்ஆறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி கண்ணன்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வெல் போற்றி போற்றி

முடியாமுதலே சரணம் சரணம் முருகா குமரா சரணமட சரணம்
வடிவேல் அரசே சரணம் சணம் மயிலூ மணியே சரணம் சரணம்
கடியார்க்கு எளியாய் சரணம் சரணம் அறியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியார் கதிலே சரணம் சரணம் கந்தா சரணம் சரணம் சரணம்

துய்யாதோர் மறைகளாலும் துதிப்பதற்கு அரிய செவ்வேள்
செய்ய பேர் அடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க கண்ணன்
பொய்யில் சீர் அடியார் வாழ்க! வாழ்க! இப்புவனம் எல்லாம்!!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் புகழுரை

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் மேற்குப் புறத்தில் சகல செல்வங்களும் நிறைந்த ஊர் சுழிபுரம். இதன் மத்தியில் வாழ்ந்தவர் தான் அமரர் நிர்மலாதேவி (மலரக்கா). இவர் மனுநீதி வல்லப முதலி வழித்தோன்றல். சைவ வேளாண்குல K.C.அப்புத்துரை விதானையார் - திலகவதி தம்பதியினரின் மூன்றாவது குழந்தையாக 1947ம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி பிறந்தார். “விளையும் பயிரை முளையில் தெரியும்” என்பதற்கமைய இவர் இளம் வயது தொடக்கம் சிறந்த கல்வியும் துரித விளையாட்டும் துடியாட்டமும் கொண்டவராக இருந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத் திலும் மேற்படிப்பை விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று வந்தார். சிறு வயது தொடக்கம் இன்று வரையும் நாங்கள் அவர்களுடன் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் போல் வாழ்ந்து வருகின்றோம். சிறு வயது தொடக்கம் தனது பிடிவாதத்தை விட்டுக் கொடுக்கமாட்டார். எதையும் முன்னின்று நடத்த வேண்டுமென்று முன்னுக்கு நிற்பார். பாடசாலைக் காலங்களிலும் வீட்டுக் குடும்பப் பொறுப்பை ஏற்ற காலங்களிலும் ஒரே கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். இவருடைய தந்தையார் எப்படித் தனது விதானைத் தொழிலை நடாத்தி வந்தாரோ அதேபோல் இவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தன்னை அணுகுவோர் அனைவரதும் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார். உறவினர்கள், நண்பர்கள், அயலவர், ஏழை, பணக்காரன் என எல்லோரையும் பாரபட்சமின்றி இன்முகத்துடன் உபசரித்து வந்தார்.

கடந்த 40 ஆண்டுகளாகக் குடும்பப்பாரத்தை ஏற்று சிவபதம் அடையும் வரையும் அப்பொறுப்பை சிறப்பாக நடாத்தி வந்தார். இவரு டைய இல்லத்தில் எவ்வேளையிலும் தந்தை தாய் இல்லாத இடத்தில் அவர்கள் செய்த சேவைக்கு மேலாக உடன் பிறந்த சகோதரர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் அயலவர், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏழை மக்களுக்கும் ஏனையோருக்கும் ஒரு பெரிய ஆலமர விருட்சமாக நிழல் கொடுத்து புன்சிரிப்புடனும் வேண்டிய வேளைகளில் அன்பு கலந்த அதிகாரத் தொனியுடனும் காரியமாற்றும் பாணி அவரின் தந்தையாரை எனக்கு நினைவுபடுத்தும்.

சமயப் பணியில் ஈடு இணையற்ற பல செயல்களைச் செய்துள்ளார். பல தான தர்மங்களையும் செய்துள்ளார். குறிப்பாக இவர் சுழிபுரம் கம்பனை இராஜ ராஜேஸ்வரி ஆலயத்தின் தலைவராக இருந்து அவ் ஆல யத்தின் வளர்ச்சிக்கும் அடியார்களின் வசதிக்கும் ஏற்ப இவ் ஆலயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறம்பட நிர்வகித்து வந்தார். சான்றாக 12 வருடத்துக்கு ஒரு முறை நடாத்தப்படும் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தில் நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்தது அதனை இவருடைய நிர்வாக காலத்தில் சிறப்புற நடாத்தி அம்மன் அருள் பெற்றார். எமக்கும் பெற்றுத் தந்தார். ஆலய குருமார்களும், நிர்வாகத்தினரும், உபயகாரரகளும் மற்றும் அனைவரும் இவருடைய வியூகத்தை, முன்னேற்றச் செயல்களை மறுப்பது கிடையாது. பூஜைக்குரிய பொருட்களை சுவாமி வீதி உலா வரும் வாகனங்களையும் ஏனைய ஒலி,ஒளிபரப்புப் பொருட்களையும் அடியார்களிடம் அன்பாகக் கதைத்து ஆலயத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்துள்ளார். இவர் அன்று முதல் இன்று வரை என்னையும் தன்னுடைய உடன்பிறப்புப் போல் நடாத்தி வந்தார். அதன் பிரதிபலிப்பாகவே என் செயல்களும் அவர் சார்பில் அமைந்திருந்தது. நான் கொழும் பில் இருந்து ஊருக்குப் போனதும் ஆசையம்மா என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வீட்டுக்குள் நுழைவேன். அவரும் இன்முகத்துடன் "வாகை மாமா வந்துவிட்டியோ?" என்று கூறிக்கொண்டு தேநீருடன் மாத்திரம் நில்லாது மதிய, இரவு உணவுகளும் தந்து உதவுவார். நானும் நேரடியாகக் குசினிக்குள் சென்று உரிமையுடன் எதையும் எடுத்துச் சாப்பிட்டு வருவேன். என்மீது மாத்திரமல்ல என் குடும்பத்தினர் மீதும் அன்பும் ஆதரவும் காட்டி வந்தார். கொழும்புக்கு வாகனம் வந்தால் பலாப்பழம், மாம்பழம் அனுப்பி வைப்பார். சிவபதம் அடையும் முதல் வாரமும் எனது மனைவியும் பிள்ளையும் அங்கு சென்ற இடத்தில் மாம்பழங்கள் கொடுத்து அனுப்பியுள்ளார்.

இப்படி நற்குணம், நல்மனம், படைத்த பெருந்தகை எங்களை விட்டு கம்பனை அம்பாளுடைய பாத கமலங்களை அடைந்துள்ளார். இருப்பினும் உலகியல் பார்வையில் இது எமக்கு ஒரு பேரிழப்பாகும். பல சமயங்களில் அவர் கூறும் கூற்று "நான் நடந்து திரியும் பொழுதே என்னுடைய உயிர் பிரிய வேண்டும்" என்பதேயாகும். அவர் வாக்கு பலித்ததை இன்று நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம் உணர்கின்றோம். இவ்வாறு இறைபதம் அடைவதற்கு அவர் "கொடுத்து வைத்தவர்" "வைத்துக் கொடுத்தவரல்ல" யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் அவர் வேண்டியபடியே இறைவனடி சேர்ந்துவிட்டார். ஆயிரம் குருவிகளுக்குத் தஞ்சம் அளித்த ஆலமரம் சரிந்துவிட்டது. இனிக் குருவிகளின் நிலை என்ன? ஏங்கித் தவிக்கின்றோம். ஆசையம்மா, "குருவிகளே பயம் வேண்டாம்," ஆசையம்மாவின் அபயம் அம்பாள் ஊடாக குருவிகளுக்கு என்றும் உண்டு. இது நிதர்சனம்.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை - கம்பனை
இராஜராஜேஸ்வரியை தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

அன்புடன்
*Dr* க. சிவராசா (வாகை)
அப்புத்துரை நிர்மலாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் வாழ்வில் மலர் அன்ரி

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் பரிவிடமாய்
அறிவின் அகலிடமாய்
எம்மை அரவணைத்த தாயே!
நம்ப மறுக்கிறது மனம் - மலர் அன்ரி
எம்மோடு இல்லை என்பதை,
உறவு என்ற கட்டிற்கு அப்பாற்பட்டது
நீங்கள் எம்மீது வைத்த பாசம்.
கடைசி வரை எம்மோடு கலகலத்த நேசம்
கடைசி நிமிடத்தில் காணாமல் போனது எங்கே?
எமைப் பெற்றெடுக்காத தாயே!
அழைத்த போதெல்லாம் ஆறுதல் தந்தீர்களே
நாம் பிறந்தநாள் தொடங்கி
பிரியும் நாள் வரை உங்களை
எம் அகக் கண்களாலும் புறக்கண்களாலும்
கண்டோம் களித்தோம் கர்வம் அடைந்தோம்
இன்று நீங்கள் எம்மோடு இல்லை என்பதை
எண்ணிக் கலங்கித் தவிக்கின்றோம்.
போற்றுவார் போற்றட்டும் - புழுதிவாரித்
தூற்றுவார் தூற்றட்டும்-என
எதையும் பொருட்படுத்தாது
என் வழி தனி வழி என்று
எல்லோருக்கும் நன்மை செய்யும் அன்பு ஜீவன் - மலர் அன்ரி
எமது குடும்ப நன்மை தீமைகள்
எமது உடல் உள வலிகள்
அனைத்தும் உங்கள் கையில்
நண்பனாய் நல்லாசானாய்
எம் வாழ்வின் வளர்ச்சி உங்கள் உபதேசத்தோடு
எம் வாழ்வின் விருத்தி உங்கள் வழி நடத்தலோடு
உங்கள் அறிவுரைகள் எம்மை வழி நடத்த
எம் கனவுகளை நோக்கி நாம் நகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஆசி என்றும் எமக்கு உண்டு
என்ற நம்பிக்கையில் ஆறுகின்றோம் - மலர் அன்ரி
கோயில் கோயில் என்று கம்பனைக்கு
நடை நடந்து இன்று அம்பாளுடன் கலந்துவிட்டீர்கள்
சிந்தை கலங்குதம்மா நீங்கள் பிரிந்ததிலே
உங்கள் ஆத்மா ஆறுதலடையட்டும்
உங்கள் யாத்திரை பூரணமடையட்டும்
எங்கள் இதய பூர்வமான பிரார்த்தனைகள் உங்களுக்காக..........

"சேனர் வளவு"
சுழிபுரம் மத்தி
சுழிபுரம்.

மலர் அன்ரியின் நினைவுகளுடன்.....
**அருணாசலம், சந்திரா,**
**ஜனனி, கௌதமன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுழிபுரம் – கம்பனை

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தொண்டர் சபையின் பிரார்த்தனை உரை

"தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை" என்ற முதுமொழி முற்றிலும் உண்மையானது. தாயின் அன்பை எவராலும் மறுக்க முடியாது. சுழிபுரம் கிராமத்தில் சீரும் சிறப்போடும் வாழ்ந்த குடும்பத்து புதல்வி செல்வி நிர்மலாதேவி அப்புத்துரை அவர்களின் பிரிவு குறித்து மிகவும் கவலை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்திற்கும் ஆலயத்திற்கும் நீண்ட தொடர்பு உண்டு. அன்னாரின் தந்தையார் ஆலய நிர்வாக சபையின் தலைவராக நீண்டகாலம் சேவை ஆற்றியவர். அவருக்குப் பிற்பாடு ஆலய அருட்பணிகளைத் தொய்வு இன்றி மிகவும் நேர்த்தியாகவும், திறமையாகவும் செயலாற்றினார். இதற்கு சான்று அம்பாளுக்கு மூன்று தசாப்தத்திற்குப் பிற்பாடு 2010ஆம் ஆண்டு கும்பாபிஷேக விழாவைச் சிறப்பாக நடாத்தி அருள் பெற்றார். இறைபக்தி நிறைந்த குடும்பத்தவர் களின் விருட்சமாக விளங்கிய அம்மையாரின் ஆத்மா கம்பனை அம்பாளின் திருப்பாத கமலங்களை ஆறுதல் பெறப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்"

**கம்பனை அம்மன் தொண்டர் சபை**

சுழிபுரம்
23.04.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய ஆசை அம்மா

எனது இளமைப் பிராயத்தில் என் சிறிய தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தேன் தன் பிள்ளை போலவே கருதி சிறு வயதில் என்னை வளர்த்த என் சிறிய தாயாரின் நினைவுகள் என்றும் மனதை விட்டு நீங்காது. அவர் சீராட்டி உணவு ஊட்டி வளர்த்த பசுமையான நினைவுகளை நான் இன்றும் நினைக்கின்றேன். வளர்ந்து வரும் காலத்தில் ஒரு தாயாக அவர் கூறிய புத்திமதிகள் என்றும் என் காதுகளில் ஒலிக்கும்.

எனது பேரனாரின் சமூகப் பணிகளைத் தொடர்ந்து செய்வதில் ஈடுபட்டார். கம்பனை அம்மன் ஆலயத்தை பல வருடங்களாக சிறப்பாக நிர்வகித்து உறவினர்கள் ஊறவர்களின் உதவிகளுடன் சிறப்பாக திருப்பணி செய்து மூன்று கால பூசைகள் மற்றும் இந்து சமய நிகழ்ச்சிகள் நடப்பதற்கு அரும்பாடு பட்டார். போர்க்கால சூழலினால் பல சிரமங்களுக்கு மத்தியில் மிகுந்த நம்பிக்கையுடன் கோவிலைப் பராமரித்து வந்தார்.

நாட்டு நிலைமைகளினால் இடம்பெயர்ந்து வந்த எமது மக்களை அன்புடனும் ஆதரவுடனும் உணவளித்து இருப்பிடம் அளித்து உதவினார். அவருடைய இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான மக்கள் கண்ணீர் மல்க தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

பெறாமகன்
கிரி
மெல்பேர்ன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி நிர்மலா (மலரக்கா) அவர்களின் சேவை விழுமியங்கள்

இலங்கை வடமாகாணம், வலிகாமம் மேற்கு சுழிபுரம் கிராமம், பல வரலாற்றுக்கான சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதிலும், பறாளாய் விநாயகர் ஆலயம் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் "பறாளாய் விநாயகர் பள்ளு" என்ற பாடல் பெற்ற ஸ்தலமாகும். அசோக மன்னனின் மகளான சங்கமித்திரை வெள்ளரசங் கிளையுடன் வந்திறங்கிய கடற்கரையும், இராம பிரானின் புனித பாதம் நிலத்தில் பட்ட திருவடிநிலைத் தீர்த்தக்கரையும் இந்தச் சுழிபுரக் கிராமத்துக்கு சிறப்பும், பெருமையும் சேர்த்தவையாகும். அத்துடன், கம்பனைப் பகுதியில் கோவில் கொண்டருளிய அருள்மிகு கம்பனை அம்பாள் ஆலயத்தின் அரசமரநிழல் பட்டாலே சகல நோயும் தீர்ந்துவிடும். என்பது சகல மெய்யடியார்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இப்படியான வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களுக்கு புனருத்தாரண வேலைகளை தாமாக முன்வந்து நின்று கொண்டு செய்கிற பெரும் பாக்கியம் ஒருசிலரின் வாழ்க்கையில் தான் வரமாக வந்து அமைகிறது. அத்தகைய பெரும் பேறு பெற்றவர்களுள் செல்வி அப்புத்துரை அவர்கள் முதன்மையானவர்.

இல்லற பந்தத்தினுள் தன்னை ஈடுபடுத்தாது சைவத்துக்கும் தமிழுக்கும் சேவை செய்த நாவலர் பெருமான் போன்று மலரக்கா அவர்களும் தனது செயற்பாட்டினை கம்பனை அம்மனின் ஆலய புனருத்தாரண வேலைகளில் தன்னையும் இணைத்துக் கொண்டு செயலாற்றிய பெருமைக்குரிய மாதரரசியாவார். பறாளாய் முருகன் ஆலய உற்சவகால திருப்பணிகள், விரதகால அனுஷ்டானங்கள் இவற்றுள் ஒன்றையும் தவற விடமாட்டார். எவ்வளவு தூரத்தையும் காலால் நடந்து சென்று செயலாற்றித் திரும்புவதில் ஒரு பெரிய மன நிறைவையும், மகோன்னதமான மனச் சாந்தியையும் பெற்ற புண்ணியவதியாவார்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி..." என்றார் மணிவாசகர் பெருமான். அது இந்த வரப்பிரசாதங்கள் மானுடராகப் பிறந்த எல்லோருக்கும் கிட்டுவதில்லை. ஒருசிலருக்குத் தான் வரமாக அமைகிறது. இதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் பூர்வ புண்ணியம் செய்து பிறப்பெடுக்க வேண்டும். அத்துடன் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரும் கல்வி கற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிர்வாக சபை உறுப்பினராக கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். அவரோடு நெருங்கிப் பழகும் சிலர் உரிமையுடன் "எப்பிடி மலர் எல்லாத்தையும் பங்கு பற்றிச் செய்கிறாய்?" என்று அன்புரிமையுடன் கேட்பார்களாம். "எனக்கும் குழந்தைகள் காலோடும் கையோடும் இழுபட்டால் நான் எங்கே வெளிக்கிட முடியும்?" என்று சிரித்துக்கொண்டே பதில் கூறுவாராம். எந்தக் காரியத்தைச் செய்தாலும், எந்த விழாவிற்குச் சென்றாலும் மற்றையவர் வாயிலிருந்து "பழைய விதானையாற்றை மகள்" என்ற சிறப்புப்பெயர் மலரக்காவுக்குத் அடைமொழியாக அமையுமாம்.

இத்தனை பெரும் பேறு பெற்ற இவர், பெற்றோருடன் வாழ்ந்த காலத்தில் உடன் பிறப்புக்களின் பிள்ளைச் செல்வங்களைத் தோளிலும், இடுப்பிலும் சுமந்து ஊட்டி வளர்த்த... "ஆசையம்மா" என்ற பெருமைக்கும் உரியவரா வார். அன்னாரின் அருமை, பெருமைகளையும் அன்பு பாசத்தையும் அவரின் கையால் உணவருந்திய ஏழைமக்கள் கண்ணீர் வடிப்பதிலிருந்து புரிந்து கொள்ளமுடியும்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து ஒரு நொடியில் இந்தப் பூவுலகை நீத்த நிர்மலாதேவியின் புகழ் என்றும் நிலைக்கும்.....!

அன்பு நண்பன்
**அருணகிரிக்காக**
**சத்தியகீர்த்தி**
மேல்பேர்ண்,
அவுஸ்ரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி அப்புத்துரை நிர்மலாவின் அரிய சேவைகள்

இந்து சமுத்திரத்தின் முத்து என விளங்கும் இலங்கைத் திருநாடு
முந்தும் வடமாகாண யாழ்ப்பாணத்திலே வலிகாமம் மேற்கு
சுந்தரப் பகுதியாய் சுழிபுரம் மிளிர்வதால் வரலாற்றுச் சிறப்புக்கள்
அந்தக் கிராமத்துக்கு அத்தனையும் பெரும் புகழாகுமே...!

திருவடிநிலை என்ற தீர்த்தக் கரையுடன் பறாளாய் விநாயக
முருகனும் அருகமர்ந்த மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற
பெருமைகள் நிறைந்ததும் பெரியோர்கள் வாழ்ந்ததும்...
சுருங்கச் சொன்னால் சுழிபுரக் கிராமம் முன்னிலையில்...!

கம்பனைப் பதியமர்ந்து அரசமரம் காற்றசைக்க...
எம்மனத்துள்ளே வீற்றிருக்கும் அம்பிகையின் பாதத்தை
நம்பிக்கை வைத்து அவள்பாதம் தொழுவோர்க்கு...
கும்பிடக் கும்பிட குவியும் சிறப்பெல்லாம்..

மலரின் மலர்ந்த முகம்பார்க்க, ஆசையம்மாவின் அன்பு முகம் பார்க்க...
நலம் கேட்க சுழிபுரத்தை மறந்தவர்கள் யாரும் இல்லை...
ஓடோடிவந்த உடன் பறாளாய் கோவில், விக்ரோறியாக் கல்லூரி...
தேடிவந்து பிறந்த மண்ணை மிதியாத வருடமில்லை...!

இத்தனை இடங்களிலும் தன்கால் தடம்பதித்த சீமாட்டி...
சுத்தமான இதயத்துடன் சேவைசெய்ய தன்னை அர்ப்பணித்த
எத்தனை தடங்கல்கள் எதிர்வந்த போதிலும் உறுதியை
மொத்தமாய் வழங்கி வேலைகளை பூரணமாய் முடித்தாரே!

கம்பனை அம்பாளின் பாலஸ்தாபனம் தொடக்கம்
நம்பும் அடியார்களுடன் மண்டலபிஷேகம் முடியும் வரை
மும்முரமாக வேலைகளை முடிக்க வேண்டுமென்று
பம்பரம் போல் சுழன்று சுழன்று பாடுபட்ட பரோபகாரி!

முருகனின் வேண்டுதல்கள் பிள்ளையாரின் நேர்த்திக் கடன்
உருகி வேண்டி நின்று ஓடி ஓடி கரும மாற்றி உள்ளம் வைரமாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் வந்து நிற்போரின் பசித்த முகம் பார்த்து பகிர்ந்தளித்த
திருமகளாம்நிர்மலா வேரெல்லாம் விதையானாய்!

யுத்த காலக் கெடுபிடியில் மக்கள் நாட்டைவிட்டு ஓடுகையில்...
அப்புத்துரை விதானையாரின் மலர்மகளாம் நிர்மலா...
தடுமாற்றம் இன்றி நிதானமாய் மனுநீதி இல்லத்தில்...
கொடுத்துச் சிவந்த கையும் கொள்கையால் அன்னையாய்...

உடன்பிறந்தவர்க்கும் நீ ஊட்டி வளர்த்தவர்க்கும்
படுக்கையில் வைத்து உன்னை பராமரிக்க இடமின்றி...
திடுக்கிட வைத்த தம்மா நீ திடீரென மறைந் செய்தி...
அடுக்குமோ... சொல்லுங்கள் ஆசையம்மா எம்மை வளர்த்தவள் நீ!

வெளிநாட்டில் உடன்பிறந்தவர் உழைத்தபணம் வீண்விரயமாகாமல்...
தெளிவான சிந்தனையுடன் சிக்கனமாய் நீ வாழ்ந்து...
அழியாப் புகழை உன் சந்ததிக்கு... ஈட்டிவைத்தாயம்மா...
விழிநீர் நிலம் நனைய வீழ்வது தெரியல்லையோ...?

ஒருதடவை தானம்மா மனிதன் பிறப்பதுண்டு
பெருமை நிறைந்த வாழ்வை பெரும்பேறாய் பெற்றவளே...
அருமையான நிர்மலா அப்புத்துரையய்யா மகள் என்று...
உருகும் உயர்உள்ளங்கள் உங்களை மறக்கமாட்டார்!

அன்புடன்
**திருமதி சுப்பிரமணியம்**
தொல்புரம்,
சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our dearest aasai mamy, who are we going to run to hug now when we come to Chulipuram. We will miss your sweet smile, your bossy caring nature that feeds us all our favourite yummy food and stands up to our parents when we are being told off by them. You were a second mother to all of us. Your voice on the phone that says 'oam sollungo" with so much love will forever stay with us.

Yours beloved மருமகள்
**Thilka.**

## To my Chella aasai amma.

You were gone too soon, so suddenly. It is difficult to accept that you are no longer with us on Earth. They say there is a reason and that time will heal, but neither of it will change the way I feel. I know you are up in heaven now with achiappu and ammamma having a cup of tea and will always guide us through our journeys ahead. Thank you for being Apputhurai Vidhanayar family's pillar of strength. My memories with you will always be treasured.

Your loving மகள்
**Tharshanah.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Golden Rule says, "Do unto others as you would have them do unto you." She did what she wished. She helped others, did for others and looked after others. My most fond memory is that whilst all the doubters stared at me, she embraced my wife with open arms and a lot of food. God bless you my beloved Mami.
"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"
Translation: The beauty of the soul is known in the face (or the beauty of the mind appears in the face).
We will always miss, but will carry on your legacy.

Your loving மருமகன்
**Manukharan.**

**Message from Her grandchildren**

Dalai Lama once quoted that our prime purpose in this life is help other chulipuram patti was the best resemblance of as she always cared for others she was always full of joy selfness and hassacrificed so much for other her selfless personality and character was known by many around her when we visited patti in srilanka she always made us smile and she always made sure we were comfortable and safe her generosity and sense of humour will always be remerbered these are a few of the reason we love her we will miss her so dearly and she will always be in our hearts. may she rest in peace in heaven

**(Sambika, Abiramyaa,Kavipriya, Vyshalini, Nivetha, Dinesh)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் காரியசித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

சகல காரியங்களிலும் சித்திபெற யானை முகத்தானைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

பந்தம் அகற்றும் அனந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சாந்த மன்ற ஆகமங்களைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருள் என-இவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம். 2

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிலீ மும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர் வாழ் பதியும் உறச் செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும்அப் பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்த
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம். 5

வேகம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாதமுடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியை
புகழ்ந்து சரணம் அடைகின்றோம். 6

மண்ணில் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச அறிவில் பசு அறிவில்
பற்றக் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாய் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம். 8

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டு நாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டுமுறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்.

உலகெலாம் உணர் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்
குரவாய் வருவா யருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்க அஷ்டோத்திரம்

**சமஸ்கிருதம்**

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபிரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

அஷ்ட தளேபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

லிங்காஷ்டகம் இதம் புண்யம்
யபடேத் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்னோதி
சிவேன ஸஹ மோத தே!

**தமிழாக்கம்**

ப்ரம்ம முராரியர் போற்றிடும் லிங்கம்
சிறிதும் கலங்கம் இல்லா சிவ லிங்கம்
பிறவியின் துயரை போக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரும் முனிவரும் போற்றிடும் லிங்கம்
காமனை எரித்த கருனா லிங்கம்
ராவண உள்ளம் விலங்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

வாசம் அனைத்தையும் பூசிய லிங்கம்
வளர் அறிவாகிய காரண லிங்கம்
சித்த சுராசுரர் போற்றிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

பொன்மணி சூடி சுடர்ந்திடும் லிங்கம்
தன்னிலை நாகம் அணிந்திடும் லிங்கம்
தக்ஷனின் யாகம் வீழ்த்திய லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமம் சந்தனம் பூசிய லிங்கம்
பங்கஜ மாலையை சூடிய லிங்கம்
முந்திய வினைகளை போக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவர் கனங்களின் அர்ச்சன லிங்கம்
தேடிடும் பக்தியின் ஊறிடும் லிங்கம்
சூரியன் கோடி சுடர்ந்விடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

எட்டு தளத்தினில் எழுந்திடும் லிங்கம்
எல்லாம் ஆகிய காரண லிங்கம்
எட்டு தரித்திர நீக்கிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தேவரின் உருவின் பூஜைக்கோர் லிங்கம்
தேவ வணமலரை ஏற்றிடும் லிங்கம்
பரமண அதணாய் பரவிடும் லிங்கம்
நாளும் வணங்கும் சதாசிவ லிங்கம்

லிங்காஷ்டக இதை தினமும்
சிவ சந்நிதியில் சொல்வார்
சிவலோக காட்சியுடன்
சிவன் அருளும் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபினி மதியனி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிட சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கணபாணியன் கனிமுகம் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

கானுறு மலரெனக் கதிரொளி காட்டி காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
என் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்ச நல்பாணியளே
கொஞ்சிடும் குமரனை குணமிகு வேழனை கொடுத்த நல்குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற்சக்தி எனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

எண்ணிய படி நீ அருளிட வருவாய் என் குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை என்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமதை தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.

ஜெய ஜெய பாலா சாமுண்டீஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய
# ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயுமானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகையீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மை ஆனவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமையானவள்
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமலா துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

("தேவிதுர்க்கையே ஜெய தேவி துர்க்கையே" என்ற சொல் வரும்போது விரதம் இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது நல்லது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கா தேவி சரணம்!

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி துர்க்கா தேவி சரணம் (ஜெய)

துர்க்கை அம்மனைத் துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளை
தரிசனம் கண்டால் போதும்
கர்ம வினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும் (ஜெய)

பொற் கரங்கள் பதினெட்டும்
நம்மைச் சுற்றி வரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும்
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையவளே
ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் நம்மை காப்பவளே (ஜெய)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் ஏந்தி நிற்பாள் அம்மாதா
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடி மேல் சூடி நின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையர்க்கரசியும் அவளே
அங்கயற்கண்ணியும் அவளே (ஜெய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய
## ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜகமது பாவும் ஜயஜயவெனவே
சங்கரி உன்னைப் பாடிடுமே
ஹறநஹறந தகதக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதியானவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (01)

தண்டினிதேவி தக்ஷினி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முந்தினி தேவி முனையோலி சூலி
முனிவர்கள் தேவி மணித்தேவி
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (02)

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (03)

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்றுறை தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
காணக யாயே காசினியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (04)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண்மையளே
நறுமலரானாய் நல்லவளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாப நிவாரணி ஜெய துர்க்கா. (05)

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (06)

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுரை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுரை ஜோதி பூரண ஜோதி
பூத்தனர் ஜோதி பூரணியே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (07)

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரிணி சந்திர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மா மனதினி ஸ்கந்த
மாதினி காத்யாயன்ய யளே
ஜெய ஜெய காலராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீ நவ துர்க்கையளே
ரோக நிவாரிணி சோக நிவாரிணி
தாப நிவாரிணி ஜெயா துர்க்கா. (08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் பாடல்கள்

**இராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ஆதி**

ஸ்ரீ சக்ர ராஜ சிம்மாசனேஸ்வரி
ஸ்ரீ லலிதாம்பிகையே புவனேஸ்வரி
ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சடாட்சர ஜனனி நாராயணி
ஞானவித்யேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி.

❖❖❖

**இராகம்: புன்னகவராளி** **தாளம்: ஆதி**

பலவிதமாய் உன்னைப் பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகம் முழுதும் எனது அகமுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சி காமேஸ்வரி.

❖❖❖

**இராகம்: நாதநாமக்கிரியை** **தாளம்: ஆதி**

உளன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக் கட்டி வைத்தாய்
நிழல் என தொடர்ந்தமுன் ஊழ் கொடுமையை நீக்க செய்தாய்
நித்ய கல்யாணி பவாணி பத்மேஸ்வரி.

❖❖❖

நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு
அம்பிகையை கை தொழுதால் அதி வரம் பெறலாம்.

❖❖❖

எண்ணித்துணிக கருமம் துணந்தபின்
எண்ணுவது என்பது இழுக்கு.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: சுத்தசாவேரி　　　　　　　　　　தாளம்: கண்டசாபு

## பல்லவி

தாயே திரிபுர சுந்தரி உமாமகேஸ்வரி
சியாமளே சௌந்தரி தாளினை மலரே சரணம்

## அனுபல்லவி

தேயாத புகழ் மேவும் திருவாண்மி யுறீர்வளர்
தேனாள் மொழி வள்ளி ஜெகமெல்லாம் தழைக்க　(ஸா, ரிஸ்தா)

## சரணம்

காமதேனு வணங்கும் கருணா ரூபிணி
கண்ணொளி யாளருள் காட்டும் தயாபரி
சாமகான மகிழ் சதா சிவ பரம் என்னும்
தனி மருந்துணையாய் பிணியெல்லாம் களைவாய்

ஸா, ரிஸ்தா ஸ்தபா தபமா பமரிஸத
ஸா, ரிஸா தபா ரிஸா தபமபத
ஸ்ாஸ்தரிஸ்தப தாதத ஸ்தபம பாபம
தபமரி மாமம பமரிஸ ரீரி ரிமரிஸத
ஸாரிஸா மரிஸா பமரிஸா தபமரிஸா
ஸ்தபமரிஸா ரிஸ்தபம ரிஸா ம்ரிஸ்தப
தா, ஸ்ாஸ்ரிம்ரிஸ்ரீ, ரீ மாபா பதஸ் தபதா, தா ஸா, ஸஸரிமபத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகத் ஜெனனி சுகவாணி கல்யாணி

**இராகம்: ரதிபதிப்பிரியா** **தாளம்:**

## பல்லவி

ஜெகத் ஜெனனி சுகவாணி கல்யாணி (ஜெகத் ஜெனனி)

## அனுபல்லவி

சுக சொரூபிணி மதுர வாணி
சொக்க நாதர் மனம் மகிழும் மீனாட்சி

## சரணம்

பாண்டிய குமாரி பவானி அம்பா
சிவ பஞ்சமி பரமேஸ்வரி
வேண்டும் வரம் தர இன்னும் மனமில்லையோ
வேத வேதாந்த நாத சொரூபிணி (ஜெகத் ஜெனனி)

# தாய் மூகாம்பிகை

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரிணி நீ பரிபூரணி நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஒரு மான் மழுவும் சிறு கூன் பிறையும்
சடை வார் குழலும் பிடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே

ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரிணி நீ பரிபூரணி நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்
சன்மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே

அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரிணி நீ பரிபூரணி நீ

சுவர்ண ரேகையுடன் சுயமாகி வந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
பல தோத்திரங்கள் தர்ம சாஸ்த்திரங்கள்
பனிந்தேத்துவதும் மணி நெத்திரங்கள்

சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ
சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத் காரிணி நீ பரிபூரணி நீ
ஜகத் காரிணி நீ பரிபூரணி நீ
ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியம்மைப் பதிகம்

ராகம்: ஷண்முகப்பிரியா, பிலகரி கல்யாணவசந்தம், அமிர்தவர்ஷினி

பாடியவர்: அபிராமிப்பட்டர்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

திருமாலின் தங்கையே! திருக்கடவூர் என்ற தலத்தில் வாழ்பவரின் நல்வாழ்வுக்கு அடிப்படைக் காரணமாய் விளங்குபவரே! அமிர்தகடேசுவ ரான சிவபெருமானின் ஒப்பற்ற இடப்பாகத்தை விட்டு நீங்காது இனிய சொல்லைப் பேசுபவளே! அருளுடைய பார்வதியம்மையே! பேரழகுடைய அபிராமியே! குற்றமில்லாத நட்பு, வளம், இளமைத்தன்மை, நோயில்லா உடல், தளர்ச்சியில்லா உள்ளம், அன்பு நீங்காத இல்லாள், மக்கட்பேறு, புகழ், செல்வம், அறநெறியினின்றும் மாறுபடாத செங்கோன்மை, நல்ல வாழ்வு, நின் திருவடிகளில் பக்தி ஆகியவற்றை அருளிப் பெருமையுடைய அடியவருடனே என்னைச் சேர்த்தருளுவாயாக!

இத்தகு அனைத்துச் செல்வங்களும் பெற்றாலும் அடியவரிடம் சேர்ந்திருத்தலிலேயே இவை நிலைக்கும் என்பார், நிறைவாக அடியவரின் கூட்டம் வேண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் ஜெய ஜெய சக்தி

ஜெய ஜெய, ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜெய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்கத்
தேவையெல்லாம் அடைய - அம்மம்மா
பக்தி பெருகிடப் பாடியுருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ (ஜெய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய் - அம்மம்மா
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ (ஜெய)

காசின் எங்கும் வேற்றுமைபோக
கருத்தினுள் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழவழி காட்டிடுவாய் ரஸ
தேவியுடன் ததிப்போம். - ஓம் ஸ்ரீ (ஜெய)

நமஸ்காரம் கூறிக் கருத்தினில் ஞான
நல்லொளி தீபம்வைத்து - அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜெய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பராசக்தி போற்றி மாலை

அன்னை பராசக்தி - அம்மணி போற்றி!
ஆதி சிவசக்தி - கண்மணி போற்றி!
சிவகாம வல்லி - சின்மயி போற்றி!
ஜீவ காருணி - நீலவேணி போற்றி!
புவனேஸ்வரி - புரந்தரி போற்றி!
நூயவானதி - பூரணி போற்றி!
தெய்வ குஞ்சரி - குண்டலி போற்றி!
வேதநாயகி - விமலினி போற்றி!
சைவவேணி - சன்சாசினி போற்றி!
தொண்டர் சாதகி - தயாபரி போற்றி!
சோம சேகரி - சுந்தரி போற்றி!
கௌரி காங்கேயி - காரணி போற்றி!
ராஜராஜேஸ்வரி போற்றி! போற்றி!
பரமேஸ்வரியோ பார்வதி சரணம்!
ஆனந்த தாண்டவி - சாமுண்டி சரணம்!
சிம்ம வாகினி - சண்டிகா சரணம்!
சீதாலட்சுமி - மீனாட்சி சரணம்!
துர்க்கா தேவி - புராதனி சரணம்!
பூர்ண சுந்தரி - சுடர்க்கொடி சரணம்!
செஞ்சுடாதரி - சத்யவாசனி சரணம்!
தேவ மனோகரி - தண்மயி சரணம்!
தையல் நாயகி - பைரவி சரணம்!
கொடியிடைவல்லி - கோமளி சரணம்!
லோக நாயகி - ஜோதி சரணம்!
சௌந்தர தேவி - மௌலினி சரணம்!
ராஜ ராஜேஸ்வரி - சரணம்! சரணம்!

ஸ்ரீ ஆதிபராசக்திக்கு - ஜே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா! வா! சண்முகா!

வேல் முருகா மால் மருகா வா வா சண்முகா!
கால் பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா!

நால் வேதப் பொருளான நாதா சண்முகா!
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா! (வே)

செல்வமாக சிவ அணைக்கும் சேயே சண்முகா!
செங்கதிர் வேல் தாங்கிய என் தேவா சண்முகா! (வே)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா!
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா! (வே)

தேறுதலை தருபவனே தேவா சண்முகா!
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா! (வே)

நாறுமலை மணிமார்பா நாயகா சண்முகா!
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா! (வே)

ஏறு மயில் வாகனனே ஏந்தலே சண்முகா!
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா! (வே)

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் சண்முகா!
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா! (வே)

ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா!
ஒருவனே என வினையழித்த உத்தமா சண்முகா! (வே)

எல்லையிலா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா!
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா சண்முகா! (வே)

தில்லையில் ஆடும்தேவி பாலகா சண்முகா!
திருட்டுத்தனமாய் குறக்கொடியை கொண்டவா சண்முகா! (வே)

தொல்லையெல்லாம் கடந்தபதம் தந்திடாய் சண்முகா!
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா! (வே)

கல்லை யொத்த மனமுருக கருணைசெய் சண்முகா!
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா சண்முகா! (வே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பருக்கு அன்பனே

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறு படை வீடுடையாய் வா வா முருகா

இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசன் உமை பாலகனே வா வா முருகா

உரகநாதன் மருகோனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா

எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறி நீ வா வா முருகா

ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா

ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா

ஔவைக்கு உபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா

ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைக் காத்தருளும் வைரவநாதா

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியேஒழிந்த வானவன்
குருதியும் அகந்தையும் கொண்டுதெண்டமும்
நடுதெடு வடிகனை போற்றிசெய்வோம்

இருளகற்ற வந்தவரே வைரவநாதா
இரவுப்பொழுது நாயகனே வைரவநாதா
இன்பமய ஜோதியரே வைரவநாதா
இன்னல்கள் களைபவரே வைரவநாதா
இரும்புச் சூலம் நீரல்லவோ வைரவநாதா
இங்கு வந்து காட்சி தந்தருள்வாய் வைரவநாதா

கலியுகத்தில் காதருள்வாய் வைரவநாதா
கருமைநிறம் கொண்டவரே வைரவநாதா
கந்தனுக்கு முன்வந்தாய் வைரவநாதா
கணபதிக்கு பின்வந்தாய் வைரவநாதா
கணப்பொழுதும் காத்தருள்வாய் வைரவநாதா

அரசடியும் புளியடியும் வைரவநாதா
ஆலடியும் வேம்படியும் வைரவநாதா
அமர்ந்தருள் செய்பவனே வைரவநாதா
அம்மை சிவகாமி பாலகனே வைரவநாதா
அரக்கரை அழிப்பவரே வைரவநாதா
அடியவர்க்கு எளியவரே வைரவநாதா

தங்கமயமானவரே வைரவநாதா
தயவுடனே ஓடிவாரும் வைரவநாதா
தாழ்தொழுது வணங்கிடுவோம் வைரவநாதா
தயக்கமின்றி வந்திடய்யா வைரவநாதா
தரணியிலே செந்தமிழ் பாடுவோமே வைரவநாதா
தமிழ்க்குடியைக் காத்தருளும் வைரவநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுழிபுரம் – கம்பனைப்பதி

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன்

# திருவூஞ்சல்

### காப்பு

பொன்பூத்த ஈழமாதின் முகமே யான
புகழ்பூத்த யாழ்ப்பாண மேல்பால் மேவும்
மன்பூத்த சிவநெறிக்கோர் திலக மான
மாட்சிமிகு சுழிபுரநற் கம்ப னையின்
மின்பூத்த சடைமௌலிப் பிரானின் தேவி
மேன்மைமிகு இராசராசேஸ் வரியின் மீது
நன்பூத்த நல்லிசைசேர் ஊஞ்சல் பாட
நலம்பூத்த விநாயகன்றாள் காப்ப தாமே.

### நூல்

திருவாரும் நால்வேதந் தூண்க ளாகச்
சீர்பரவு சிவாகமங்கள் விட்ட மாக
உருவாரும் உபநிடதம் வடங்க ளாக
ஒப்பரிய ஓங்காரம் பீட மாகக்
குருவாருந் திருவருளின் காட்சி நல்கும்
குவலயத்தின் தனித்தாயே எங்கள் வாழ்வே
அருளாரும் கம்பனைநற் பதியில் மேவும்
அன்னைராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 01

பார்பரவு சுடர்மதியங் குடைகள் தாங்கப்
பகர்வாயு சாமரையை வீசி நிற்கப்
பேர்வரவு நற்குபேரன் அடப்பை ஏந்தப்
பெருமைமிகு வருணதேவன் நன்னீர் நல்கச்
சீர்பரவு தேவர்குழாம் மலர்கள் தூவச்
செவ்வொளிசேர் அக்கினிகண் ணாடி காட்டக்
கார்பரவு கம்பனையிற் கோயில் கொண்ட
கருணைராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்சேர் மந்திரநன் னீரா லாட்டிச்
செழுமைமிகு நற்சாறு பலவுங் கூட்டி
வந்தனைசெய் பட்டுடுத்துப் பொட்டு மிட்டு
வடிவழகுக் கலன்பூட்டுத் தீபங் காட்டிச்
கந்தமிகு பூமாலை பலவுஞ் சூட்டிச்
சால்புமிகு திருக்கோல அழகைக் காட்டும்
எந்தமுளம் விட்டகலா அன்னை தாயே!
எழிலாரும் ஈஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 03

நேசமிகு பிரமதேவன் மறைகள் ஓத
நேரிழையூர் வசியரம் பைநடன மாட
ஆசையுடன் நாரதர்நற் கீதம் பாட
அரியயனார் ஆனந்த வெள்ளங் கூட
பாசமிலா முனிவரெலாம் ஆசி பேணப்
பானுமதி கோள்களெலாம் பரவி ஏத்தத்
தேசமெலாம் புகழ்கம்ப னையின் மேவும்
தேவிராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 04

சிவகணஞ்சேர் கிம்புருடர் தேவர் போற்றச்
சித்தரொடு ஞானபத்தர் முத்தர் போற்றத்
தவமுனிவர் கந்தருவர் இயக்கர் போற்றத்
தண்ணளிசேர் அந்தணர்கள் தினமும் போற்ற
நவமான விஞ்சையர்கின் னார்கள் போற்ற
நாமகளும் திருமகளும் நாளும் போற்றப்
பவவினையைப் போக்கிக்கம் பனையில் வாழும்
பராவரைரா சேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 05

சீரணிசேர் நாகசுரந் தவிலும் ஆர்ப்பச்
சிறந்தசங்கு பேரிகைசேர் முரசும் ஆர்ப்ப
பாரணிசெய் சல்லரிகைத் தாளம் ஆர்ப்ப
பம்பையொடு கொம்புகண்டை பலவும் ஆர்ப்ப
ஆரணியும் அரம்பையர்கள் மருங்கே ஆர்ப்ப
ஆனைமுகன் ஆறுமுகன் அருகே ஆர்ப்பக்
காரணிசெய் பசுஞ்சோலைக் குயில்கள் ஆர்க்கும்
கம்பனைரா சேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழுஞ் சிவனெறியுஞ் சிறந்தே வாழச்
சீர்மைமிகு உயர்கல்விக் கூடம் நின்றன்
சந்தமிகு வடபாலில் அன்றே தோன்றிச்
சால்புமிகு தென்பாலில் இன்றுங் காண
வந்தவகை நின்னருளின் செயல தன்றோ
வானவரும் மனகிழக் கம்ப னையில்
எந்தமுளம் விட்டகலா திருக்குந் தேவீ
இறைராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 07

சீவரெலாம் சிவமயமாய் ஆக்குந் தேவி
செனனமொன்றில் தெய்வீக வீடு நல்கித்
தேவரெலாம் போற்றுகின்ற வாழ்வு நல்கும்
சிதம்பரநற் றிருநடனம் தினமும் கண்டே
ஆவலுடன் அனைத்துயிர்க்கும் அன்பு நல்கும்
ஆனந்தி அடியரிடர் அனைத்தும் ஓடப்
பூவலரும் சுழிபுரஞ்சேர் கம்ப னையில்வாழ்
புகழ்ராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 08

பத்திமைசேர் பண்பாடும் அடியர் ஓர்பால்
பாலமுதம் படைத்துமகிழ் அன்பர் ஓர்பால்
சித்தமெலாம் சிவசக்தி யானோர் ஓர்பால்
சிறப்புமிகு திருத்தொண்டு செய்வோர் ஓர்பால்
புத்திநிறை கல்விசெறி செல்வர் ஓர்பால்
பொருந்துகின்ற பெரும்பேறு பெற்றோர் ஓர்பால்
எத்திக்கும் புகழ்கம்ப னையில் மேவும்
எழில்ராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 09

திங்களணி சிவசக்தி! ஆடீர் ஊஞ்சல்!
சிவனருளின் திருவுருவே! ஆடீர் ஊஞ்சல்!
மங்கையுமை நாயகியே! ஆடீர் ஊஞ்சல்!
மன்னுயிர்கள் வாழ்முதலே! ஆடீர் ஊஞ்சல்!
தங்குபுகழ்க் கம்பனையைத் தலமாய்க் கொண்ட
தண்ணளிசேர் தவக்கொழுந்தே! ஆடீர் ஊஞ்சல்!
தெங்குமலி கடல்சூழும் சுழிபுரத்தின்
திருமகள்ரா சேர்வரியே ஆடீர் ஊஞ்சல் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

மன்னுமறை ஆகமங்கள் வாழி வாழி
மாண்புமிகு திருமுறைகள் வாழி வாழி
பன்னுதமிழ் சொல்லறங்கள் வாழி வாழி
பாருலகில் நீதிநெறி வாழி வாழி
நன்னலஞ்சேர் சிவநெறியும் வாழி வாழி
நாடுபுகழ் சிவனடியார் கூட்டம் வாழி
எந்நகரும் போற்றுசுழி புரத்து மேவும்
எழில்ராச ராசேஸ்வரி ஊஞ்சல் வாழி.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம்
கம்பனை இராஜ ராஜேஸ்வரிக்கு - மங்களம்
திங்கள் செறி வேண்டுவோர்க்கும் செய்ய நன் நகர்க்கும்
எங்குமான கீர்த்தி செறி எங்கள் அம்மைக்கு மங்களம்
ஐங்கரர்க்கும் ஆறுமுக வேலனுக்கும் அவன் செந்தமிழிற்கும் மங்களம்
மங்கையர் புக்குமுகில் மழைமவுசு மாரியார்க்கும் மங்களம்
ஊஞ்சல் இசை பாடினார்க்கும் உற்று அதனைக் கேட்டவர்க்கும்
வாஞ்சையுடன் ஆட்டினோர்க்கும் மகவாரி திருவருட்கும்
மங்களம் மங்களம் மங்களம்.

சுபம்

யாத்தவர்:
சித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை B.A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி பாடல்கள்

ராகம்:- ஆனந்த பைரவி தாளம்:- சாப்பு

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள முற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்,
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)

தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்,
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம்,கடவுளர் தெய்வம். வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி ய.:.திங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்)

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளவ வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர். (வெள்ளைத்)

ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேண கன் றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவின் ஒளிமிகுந்தோங்க. (வெள்ளைத்)

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டை வந்தீர்
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர். (வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
அனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்.
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்)

நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் வ்வகை யானும்
இப்பெருந் தொழில நாட்டுவம் வாரீர். (வெள்ளைத்)

❖❖❖

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிப்பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை
## (குமரகுருபர சுவாமிகள் அருளியது)

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம்தாங்க என்வெள்ளைஉள்ளத்
தண்தாமரைக்குத் தகாதுகொலோ சகம்ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக்குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமுது ஆர்ந்துஉன் அருட்கடலில்
குளிக்கும்படிக்கு என்றுகூடும்கொலோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலாவல்லியே. 3

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூல்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே. 4

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற் பாத பங்கேருகம்என்
நெஞ்சத்தடத்து அலராதது என்னே நெடும்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்து அவிசுஒத்து இருந்தாய் சகலகலாவல்லியே. 5

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிதுஎய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளால்பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே சகலகலாவல்லியே. 7

சொல்விற்பனமும் அவதானமும் கவிசொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும்செல்வப் பேறே சகலகலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே சகலகலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே. 10

சகலகலாவல்லி மாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப் பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## காப்பு

தார்ரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப் போதும் என் சிந்தையுள்ளே
கார்அமர் மேனிக் கணபதியேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி, மென் கடிக் குங்கும தோயம்-என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி, எந்தன் விழுத் துணையே 1

துணையும், தொழும் தெய்வமும் பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்-பனி மலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென் பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி-ஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன், எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், நினது திருவடிக்கே,-திருவே.- வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால்,
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே. 3

மனிதரும், தேவரும், மாயா முனிவரும், வந்து, சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே.கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும்,பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை, செப்பு உரைசெய்யும் புணர் முலையாள்,
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார் சடையோன்
அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி-பாதம் என் சென்னியதே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியது, உன் பொன் திருவடித் தாமரை. சிந்தையுள்ளே
மன்னியது, உன் திரு மந்திரம்,- சிந்துர வண்ணப் பெண்ணே.
முன்னியநின் அடியாருடன் கூடி, முறை முறையே
பன்னியது, என்றும் உன்தன் பரமாகம பத்ததியே. 6

ததியுறு மத்தின் சுழலும் என் ஆவி, தளர்வு இலது ஓர்
கதியுறுவண்ணம் கருது கண்டாய்-கமலாலயனும்,
மதியுறுவேணி மகிழ்நனும், மாலும், வணங்கி, என்றும்
துதியுறு சேவடியாய். சிந்துரானன சுந்தரியே. 7

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத்தொடரை எல்லாம்
வந்து அரி சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந் தரி கைத்தலத்தாள்-மலர்த்தாள் என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன,வண்ணக் கனகவெற்பின்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர் அருள்கூர்
திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்,
முருத்தன மூரலும்,நீயும், அம்மே. வந்து என்முன் நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை,
என்றும் வணங்குவது உன் மலர்த் தாள்.-எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே. அருளே. உமையே. இமயத்து
அன்றும் பிறந்தவளே. அழியா முத்தி ஆனந்தமே. 10

ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவு உடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான, சரணாரவிந்தம்-தவள நிறக்
கானம் தம் ஆடரங்கு ஆம் எம்பிரான் முடிக் கண்ணியதே. 11

கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்து பக்தி
பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில், பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து-நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே. புவி ஏழையும் பூத்தவளே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவளே, புவனம் பதினான்கையும். பூத்தவண்ணம்
காத்தவளே. பின் கரந்தவளே. கறைக்கண்டனுக்கு
மூத்தவளே. என்றும்மூவா முகுந்தற்கு இளையவளே.
மாத்தவளே. உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே? 13

வந்திப்பவர் உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்,
சிந்திப்பவர், நல்திசைமுகர் நாரணர், சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர், பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி. நின் தண்ணளியே 14

தண்ணளிக்கு என்று, முன்னே பல கோடி தவங்கள் செய்வார்,
மண் அளிக்கும் செல்வமோ பெறுவார்? மதி வானவர் தம்
விண் அளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடும், அன்றோ?
பண் அளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே, கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே, ஒளிரும் ஒளிக்கு இடமே, எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே, வெளி முதல் பூதங்கள் ஆகி விரிந்த அம்மே.
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே. 16

அதிசயம் ஆன வடிவு உடையாள், அரவிந்தம் எல்லாம்
துதி சய ஆனன சுந்தரவல்லி, துணை இரதி
பதி சயமானது அபசயம் ஆக, முன் பார்த்தவர்தம்
மதி சயம் ஆக அன்றோ, வாம பாகத்தை வவ்வியதே? 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது-வெளி நிற்கவே. 18

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து, என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது, இல்லை, கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது, என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைகின்ற நின் திருக்கோயில்-நின் கேள்வர் ஒரு பக்கமோ,
அறைகின்ற நான் மறையின் அடியோ முடியோ, அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ, கஞ்சமோ, எந்தன் நெஞ்சகமோ,
மறைகின்ற வாரிதியோ?- பூரணாசல மங்கலையே. 20

மங்கலை, செங்கலசம் முலையாள், மலையாள், வருணச்
சங்கு அலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன் புடையாள், உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும் பெண்கொடியே. 21

கொடியே, இளவஞ்சிக் கொம்பே, எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே, பனி மால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே.
அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே.
22

கொள்ளேன், மனத்தில் நின் கோலம் அல்லாது, அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன், பரசமயம் விரும்பேன், வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே, உள்ளத்தே விளைந்த
கள்ளே, களிக்குங்களியே, அளிய என் கண்மணியே. 23

மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணி புனைந்த
அணியே, அணியும் அணிக்கு அழகே, அணுகாதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெரு விருந்தே.
பணியேன், ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்து, உன் அடியாரைப் பேணி, பிறப்பு அறுக்க,
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்,- முதல் மூவருக்கும்
அன்னே. உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே.
என்னே?-இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே. 25

ஏத்தும் அடியவர், ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்,- கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே.- மணம் நாறும் நின் தாளிணைக்கு என்
நாத் தங்கு புன்மொழி ஏறியவாறு, நகையுடைத்தே. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை, பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை, நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை,-சுந்தரி - நின்அருள் ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் என, நடம் ஆடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும்,சிவலோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தரும் தெய்வம் ஆகித் திகழும் பரா
சக்தியும், சக்தி தழைக்கும் சிவமும், தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்து ஆகி முளைத்து எழுந்த
புத்தியும், புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே. 29

அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய், கொண்டது அல்ல என்கை
நன்றே உனக்கு? இனி நான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை நின் திருவுளமோ.
ஒன்றே, பல உருவே, அருவே, என் உமையவளே. 30

உமையும் உமையொருபாகனும், ஏக உருவில் வந்து இங்கு
எமையும் தமக்கு அன்பு செய்யவைத்தார், இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை, ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை,
அமையும் அமையுறு தோளியர்மேல் வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து, ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்?- ஈசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழியே அடும் காலன், எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து, அஞ்சல் என்பாய். அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே.
உழைக்கும் பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே சரணம் புகும் அடியாருக்கு, வானுலகம்
தந்தே பரிவொடு தான் போய் இருக்கும்--சதுர்முகமும்,
பைந் தேன் அலங்கல் பரு மணி ஆகமும், பாகமும், பொற்
செந் தேன் மலரும், அலர் கதிர் ஞாயிறும், திங்களுமே. 34

திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒரு தவம் எய்தியவா, எண் இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ?- தரங்கக் கடலுள்
வெங் கண் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே. 35

பொருளே, பொருள் முடிக்கும் போகமே, அரும் போகம் செய்யும்
மருளே, மருளில் வரும் தெருளே, என் மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளி வெளி ஆகி இருக்கும் உன்தன்
அருள் ஏது.- அறிகின்றிலேன், அம்புயாதனத்து அம்பிகையே. 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண் முத்துமாலை, விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக் கோவையும், பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திரு உடையானிடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திரு நகையும் துணையா, எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர், அமராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்கு, உன்தன் அடித்தாமரைகள் உண்டு, அந்தகன்பால்
மீளுகைக்கு, உன்தன் விழியின் கடை உண்டு, மேல் இவற்றின்
மூளுகைக்கு, என் குறை, நின் குறையே அன்று,-முப்புரங்கள்.
மாளுகைக்கு, அம்பு தொடுத்த வில்லான், பங்கில் வாணுதலே. 39

வாள்-நுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியை, பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை, காணும்--அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ, முன் செய் புண்ணியமே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் செய்தனமே-மனமே.- புதுப் பூங் குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடு இருக்கப்
பண்ணி, நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை-மலைகொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலம் கொண்ட நாயகி, நல் அரவின்
வடம் கொண்ட அல்குல் பணிமொழி--வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுர, வஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச்சிலைக் கை,
எரி புரை மேனி, இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

தவளே இவள், எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர்தமக்கு அன்னையும் ஆயினள், ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம்,
துவளேன், இனி ஒரு தெய்வம் உண்டாக மெய்த் தொண்டு செய்தே. 44

தொண்டு செய்யாதுநின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ, இலரோ? அப் பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ, அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே, பின் வெறுக்கை அன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே,-புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே.-
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன், மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும்படி அன்று, வேலை நிலம்
ஏழும் பரு வரை எட்டும், எட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார், பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்து குடிபுக்க ஆவி, வெங் கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது, வளைக்கை அமைத்து,
அரம்பை அடுத்து அரிவையர் சூழ வந்து, அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்து இசை வடிவாய் நின்ற நாயகியே. 49

நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாய் அகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதியுடையாள் சரணம்-அரண் நமக்கே. 50

அரணம் பொருள் என்று, அருள் ஒன்று இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே,
சரணம் சரணம் என நின்ற நாயகி தன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும் எய்தார், இந்த வையகத்தே. 51

வையம், துரகம், மதகரி, மா மகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம்,- பிறை முடித்த
ஐயன் திருமனையாள் அடித் தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும், பிச்சி மொய்த்த
கன்னங்கரிய குழலும், கண் மூன்றும், கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு, இது போலும்தவம் இல்லையே. 53

இல்லாமை சொல்லி, ஒருவர் தம்பால் சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடு தவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் ஆயிரம் ஒரு மெய் வடிவு ஆகி விளங்குகின்றது
அன்னாள், அகம் மகிழ் ஆனந்தவல்லி, அருமறைக்கு
முன்னாய், நடு எங்கும் ஆய், முடிவு ஆய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும், வேண்டுவது ஒன்று இல்லையே. 55

ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து, இவ் உலகு எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்--என்றன், நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா. இப் பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும், என் ஐயனுமே. 56

ஐயன் அளந்தபடி இரு நாழி கொண்டு, அண்டம் எல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி, ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று, பொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்: இதுவோ, உன்தன் மெய்யருளே? 57

அருணாம்புயத்தும், என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம்புயமுலைத் தையல் நல்லாள், தகை சேர் நயனக்
கருணாம்புயமும், வதனாம்புயமும், கராம்புயமும்,
சரணாம்புயமும், அல்லால் கண்டிலேன், ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிது இல்லை ஈது அல்லது, என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன், ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராகி நின்றாய்: அறியார் எனினும்
பஞ்சு அஞ்சு மெல் அடியார், அடியார் பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல் இனியாய். பனி மா மலர்ப் பாதம் வைக்க--
மாலினும், தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம் ஒரு
நாலினும், சால நன்றோ--அடியேன் முடைநாய்த் தலையே? 60

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து,
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய், என்ன பேறு பெற்றேன்.
தாயே, மலைமகளே, செங்கண் மால் திருத் தங்கைச்சியே. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலை கொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங் கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங் கைக் கரும்பும், மலரும்,எப்போதும் என் சிந்தையதே. 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி குறிக்கும்--சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலி கவர் தெய்வங்கள்பால் சென்று, மிக்க அன்பு
பூணேன், உனக்கு அன்பு பூண்டுகொண்டேன், நின்புகழ்ச்சி அன்றிப்
பேணேன், ஒரு பொழுதும், திருமேனி ப்ரகாசம் அன்றிக்
காணேன், இரு நிலமும் திசை நான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்
தகனம் முன் செய்த தவம்பெருமாற்கு, தடக்கையும் செம்
முகனும், முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ?--வல்லி. நீ செய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்று அறியேன், சிறியேன், நின் மலரடிச் செய்
பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன், பசும் பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய். வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும், நின் திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து, தொழுது, மின் போலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர்--வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம், குன்றி, நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர்--பார் எங்குமே. 67

பாரும், புனலும், கனலும், வெங் காலும், படர் விசும்பும்,
ஊறும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி, சீறடிக்கே
சாரும் தவம், உடையார் படையாத தனம் இல்லையே. 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங் குழலாள், அபிராமி, கடைக்கண்களே. 69

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன், கடம்பாடவியில் பண்
களிக்கும் குரல் வீணையும், கையும் பயோதரமும்,
மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்க்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே. 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அரு மறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள், பனி மா மதியின்
குழவித் திருமுடிக் கோமளயாமளைக் கொம்பு இருக்க--
இழவுற்று நின்ற நெஞ்சே.-இரங்கேல், உனக்கு என் குறையே? 71

எங்குறை தீரநின்று ஏற்றுகின்றேன், இனி யான் பிறக்கில்,
நின் குறையே அன்றி யார் குறை காண்?-இரு நீள் விசும்பின்
மின் குறை காட்டி மெலிகின்ற நேர் இடை மெல்லியலாய்.-
தன் குறை தீர, எம்கோன் சடை மேல் வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு, படை பஞ்ச பாணம், தனுக் கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது, எமக்கு என்று வைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கு, ஒளி செம்மை, அம்மை
நாமம் திரிபுரை, ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடி இணையைப்
பயன் என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர், கற்பக தாருவின் நீழலில், தாயர் இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை,-மால் வரையும்,
பொங்கு உவர் ஆழியும், ஈரேழ் புவனமும், பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனிகுறித்தவரே. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தேன் மனத்தில் நின் கோலம் எல்லாம், நின் குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி, வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப் பிரான் ஒரு கூற்றை, மெய்யில்
பறித்தே, குடிபுகுதும் பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி- என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி, அணி தரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்,
துப்பும், நிலவும் எழுதிவைத்தேன், என் துணை விழிக்கே. 78

விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு, வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு, அவ்வழி கிடக்க,
பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ் நரகக்
குழிக்கேஅழுந்தும் கயவர்தம்மோடு, என்னகூட்டு இனியே? 79

கூட்டியவா என்னைத் தன் அடியாரில், கொடிய வினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம்--ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே.-அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்,
வணங்கேன் ஒருவரை, வாழ்த்துகிலேன் நெஞ்சில், வஞ்சகரோடு
இணங்கேன், எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன், அறிவு ஒன்று இலேன், என்கண் நீ வைத்தபேர் அளியே. 81

அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே. அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உள்ளுந்தொறும்,
களி ஆகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன், நின் விரகினையே? 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புது மலர் இட்டு, நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்,
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை, ஒல்கு செம்பட்டுடையாளை, ஒளிர்மதிச் செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சு அடையாளை, தயங்கு நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச் சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும், சிற்றிடையும்,
வார்க் குங்கும முலையும், முலைமேல் முத்து மாலையுமே. 85

மால் அயன் தேட, மறை தேட, வானவர் தேட நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு--கதித்த கப்பு
வேலை வெங் காலன் என்மேல் விடும்போது, வெளி நில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தம், என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்,--விழியால் மதனை
அழிக்கும் தலைவர், அழியா விரதத்தை அண்டம் எல்லாம்
பழிக்கும்படி, ஒரு பாகம் கொண்டு ஆளும் பராபரையே. 87

பரம் என்று உனை அடைந்தேன், தமியேனும், உன் பத்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத் தகாது--தரியலர்தம்
புரம் அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய, போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற, கையான் இடப் பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவே. நின்சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும், துரியம் அற்ற
உறக்கம் தர வந்து, உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது, என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே. 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தாவகை, என் மனத்தாமரையினில் வந்து புகுந்து,
இருந்தாள், பழைய இருப்பிடமாக, இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை--விண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண் இடை மின் அனையாளை விரிசடையோன்
புல்லிய மென் முலைப் பொன் அனையாளை, புகழ்ந்து மறை
சொல்லியவண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்கு,
பல்லியம் ஆர்த்து எழ, வெண் பகடு ஊரும் பதம் தருமே. 91

பதத்தே உருகி, நின் பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்டாய், இனி, யான் ஒருவர்
மதத்தே மதி மயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்;
முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும்முகிழ் நகையே. 92

நகையே இது, இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு,
முகையே முகிழ் முலை, மானே, முது கண் முடிவில், அந்த
வகையே பிறவியும், வம்பே, மலைமகள் என்பதும் நாம்,
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி, மெய் புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவு இழந்து
கரும்பின் களித்து, மொழி தடுமாறி, முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே. 94

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம்: எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்து விட்டேன்:- அழியாத குணக்
குன்றே, அருட்கடலே,இமவான்பெற்ற கோமளமே. 95

கோமளவல்லியை, அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில்தன்னை, தம்மால்
ஆமளவும் தொழுவார், எழு பாருக்கும் ஆதிபரே. 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்தன், அம்புலி, அங்கி குபேரன், அமரர்தம் கோன்,
போதிற் பிரமன் புராரி, முராரி பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர், தையலையே. 97

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயும், தலை வந்த ஆறும், கரந்தது எங்கே?
மெய் வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில், புகல் அறியா மடப் பூங் குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை, கோல வியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின்மீது அன்னமாம்,
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்பு வில்லும்
விழையப் பொரு திறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!
100

## நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணைப் பாசங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத், தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

அபிராமி அந்தாதி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி புலப்படுத்தும் அம்பிகையின் தத்துவம்!

அன்பர்களே வணக்கம்.

எல்லாம் வல்ல பரமேஸ்வரன் திருவருள் துணைகொண்டு நமது ஆலய கும்பாபிஷேக விழா மலரில் அபிராமி அந்தாதி புலப்படுத்தும் அம்பிகையின் தத்துவம் என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை வடிவம் பெறுவது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. நமது வாழ்வில் அனைத்து விதமான சுக துக்கங்களை அனுபவித்து முத்திப்பேறு கிடைக்கவும் அனைத்து ஜீவராசிகளும் மகிழ்ச்சியாக இருக்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கால சம்ஹார மூர்த்தியை வணங்கி, சுருக்கமாக திருக்கடயூர் தன் வரலாறும் அபிராமிப்பட்டர் வரலாறும் சிந்தித்து, பிறகு அபிராமி அந்தாதியினைச் சிந்திப்போம்.

ஊர்: திருக்கடவூர்

இறைவன் பெயர்: அமிர்தகடேஸ்வரர்

இறைவி பெயர்: அபிராமி

தேவாரம் பாடியவர்கள் மூவர்கள், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர்.

பாற்கடலைக் கடைந்து எடுத்து அமுதத்தைத் தேவர்கள் அசுரர் களுக்கு கொடுக்க விரும்பாமல், அதைக் குடத்தில் (கடம்) எடுத்துக் கொண்டு செல்லும் வழியில், நீராடுவதற்காக குடத்தை கீழே இறக்கி வைத்து சென்றனர். நீராடி திரும்பி வந்து குடத்தை எடுக்க முயன்றபோது எடுக்க முடியவில்லை. குடம் பூமியில் வேரூன்றி விட்டது. ஆகையால் இத் தலம் திருக்கடயூர் என்று பெயர் பெற்றது.

அட்டவீரட்டானத்தில் இது முதன்மையாக விளங்குகிறது. பாடல் பெற்ற தலத்தில் 47வது தலமாக விளங்குகின்றது. காரிநாயனார் வாழ்ந்த தலம் இது. மார்க்கண்டேயனுக்காக யமனை சம்ஹாரம் செய்து, பிறகு அருள் செய்த தலம். ஆகையால், இங்கே மணிவிழா, பவளவிழா, சதாபிஷேகம், ஆயுஷ்ய ஹோமம் போன்றவை கொண்டாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமனை சம்ஹாரம் செய்த மூர்த்திக்கு பாலாம்பிகை உடனுறை ஸ்ரீ கால சம்ஹார மூர்த்தி எனவும், அபிராமி உடனுறை அமிர்தகடேஸ்வரர் என்ற திருநாமத்தோடும் இத்தலத்தில் அருள்பாலிக்கின்றனர்.

இவ்வாலயத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சுப்ரமண்யபட்டர் என்ற இயற்பெயருடன் அபிராமபட்டர் அவதரித்து, வட வடமொழியும், தென்தமிழும், சங்கீதமும், தேவி உபாசனையும் முறையாகப் பயின்று, அவர் யோக முறையில் சரியை, கிரியை கடந்து யோக நிலைக்கு சென்று அபிராமி அம்பிகை சன்நிதி முன் தியானத்தில் இருந்தார். அப்பொழுது திருக்கடவூர் தலத்திற்கு சுரபோஜி மன்னன் வருகை புரிந்தார். மன்னரைப் பார்த்து வணக்கம் செலுத்தாமல் பட்டரோ அம்பிகையின் நினைவில் இருந்தார். மன்னர் இவர் யார் என்று கேட்டார். பக்தர்கள், அவர் ஒரு பித்தர் என்று கூறினர். மன்னர் நம்பாது அவரிடம் சென்று இன்று என்ன திதி என்று கேட்டார். கேட்பவர் யார் என்று உணராமல் யோகநிலையில் அம்பிகையின் பூரண நிலவாக இருக்கக்கூடிய அம்பிகையின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பட்டர் இன்று பௌர்ணமி என்று கூறி விட்டார். மன்னர் கோபம் கொண்டு இன்று தை அமாவாசை, நீரோ பௌர்ணமி என்று கூறுகிறீர்கள் இன்று இரவுக்குள் பூரண பௌர்ணமி நிலவு வரவேண்டும் இல்லையேல் உமக்கு மரண தண்டனை என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார். தியானம் கலைந்தெழுந்து அபிராமி அம்பிகை தன்னைக் காத்தருள வேண்டும் என்று அம்பிகையின் முன்பு “உதிக்கின்ற செங்கதிர்” என்று தொடங்கும் அந்தாதியாக பாடத் துவங்குகிறார்.

70வது பாடலாக “விழிக்கே அருளுண்டு அபிராமி வல்லிக்கே” என்ற பாடலைப் பாடி முடித்ததும் அம்பிகை அவர் முன் தோன்றி அருட் காட்சி தந்து தன் “தாடங்கம்” எனும் காதுத் தோட்டினை வானத்தில் தவழ விட்டாள். அந்தத் தாடங்கம் பலகோடி நிலவு ஒன்று சேர்ந்தது போல் ஒளியைப் பொழிந்து நீ வாய்தவறி மன்னரிடம் கூறிய சொல்லை மெய்யென நிரூபித்தேன். நீ தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து பாடு என்று சொல்லி மறைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையின் பூரண அருள்பெற்று பரவசம் அடைந்து பாடல் களைப்பாடி நிறைவு செய்தார். மன்னரும் மனமகிழ்ந்து மன்னிப்புக் கோரினார். பட்டரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி ஏராளமான மானியங் களைக் கொடுத்தார். நாமும் தினம் தோறும் அபிராமி அந்தாதி பாடி மகிழ்ந்து அம்பிகையின் திருவருளைப் பெறுவோம். நூறு பாடல்களைக் கொண்ட அபிராமி அந்தாதியை சில பாடல்களை சிந்தித்து மகிழ்வோம் ஈசன் அருள் துணை நிற்கட்டும்.

அந்தாதி என்ற சொல்லுக்கு அந்தம் என்றால் "முடிவு" ஆதி என்றால் "ஆரம்பம்". எந்த வார்த்தை கடைசியில் முடிகின்றதோ அதே வார்த்தையை ஆரம்பமாகக் கொண்டு தொடங்குவது "அந்தாதி" எனப்படும். இங்கே பல அந்தாதிகள் உள்ளன. - அதாவது,

ஒலியந்தாதி, வெண்பா அந்தாதி, சிலேடை அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருவரங்கத்து அந்தாதி என்று இருந்தாலும் சிறப்பாக இருப்பது "அபிராமி அந்தாதி". இந்த அந்தாதி புலப்படுத்தும் தத்துவங்கள் அம்பி கையின் அழகும் கருணையும், சிந்தித்துப் படித்து மகிழ்வோம்.

முழுமுதற் கடவுளாம் விநாயகப்பெருமானைச் சிந்தித்து, வணங்கி போற்றுவோம்.

முதற் பாடல்:

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமல
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி உன்றன் விழித்துணையே.

காரிருளை அகற்றவல்ல செங்கதிரோனின் கதிர்களைப் போன்றது அம்பி கையின் தன்நுதலில் அணிந்திருக்கும் திலகம், எங்ஙனம் கதிரவன் உலகத்து இருள் நீக்கி இன்பம் தருகிறானோ, தாயே! உன் ???? இருளை நீக்கி அறிவையும், ஆற்றலையும் என் வாழ்விற்கு ஒளியையும் தந்திடும். இங்கே அபிராமி என்ற சொல்லுக்கு பேரழகி என்று பொருள். பேரழகி என்றால் வார்த்தையில் வர்ணிக்க முடியாத அழகி. மலராலும் பணிந்து வணங்கப் படும் பேரருளின் பேரழகு அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்திலிருந்து மருத்துவம்

சமயங்கள் அனைத்துமே மனிதனை உடல்ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் ஆரோக்கியமானவனாக வாழ்வதற்கான வழி காட்டிநிற்கின்றன. அதாவது மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுகின்றன. அதேபோல மருத்துவமும் மனிதனை ஆரோக்கியமாக வாழவைப்பதற்கே முயல்கின்றது. மதத்திற்கும் மருத்துவத்திற்கும் அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றுதான். அன்பு, பரிவு, அனுசரணை, ஆதரவு என்ற அடிப்படையில் அவை இரண்டும் ஒன்றுபடுகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனம், மனிதனின் சுகம் என்றால் என்ன? ஆரோக்கியம் என்றால் என்ன? என்று வரைவிலக்கணப்படுத்தும் போது "அது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மீக நன்னிலையும் சேர்நதிருக்கும் பொழுதே அது உண்மையான ஆரோக்கியம்" எனத் திட்டவட்டமாக வரையறுத்திருக்கின்றது. இந்த உண்மையை எமது சமயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிரூபித்து நிறுவியுள்ளன.

எல்லா மதங்களும் மனிதனுக்கு ஆரோக்கியமான பாதையையே காட்டி நிற்கின்றன. மதக்கோட்பாடுகளை விஞ்ஞான ரீதியிலே அணுகும் போது அதன் நிலை மேம்படும். உண்மையில் மதங்கள் மனிதனை மருத்துவ ரீதியிலே வழிநடத்திச் செல்வதை நாம் ஆராயலாம்.

சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்தில் இந்துமதத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு, சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து, நந்திதேவர் அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்ததாகப் பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்த சித்த மருத்துவ தத்துவங்களே ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கின்றார். அகத்தியரின் தலைமையிலே தான் இந்த சித்தமருத்துவத்துறை முழுமை யாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று எமது சரித்திர சமய வரலாற்று நூல் கள் கூறுகின்றன.

மருத்துவத்தின் இரண்டு பெரும் பகுதிகளான

1. நோய் ஏற்படுவதைத் தடுப்பது,
2. நோய்வாய்ப்பட்டவரைச் சுகப்படுத்துவது.

தற்போதைய மருத்துவ உலகு நோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதிலும் தடுப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இதற்கான செயற்பாடுகளில் சில:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கிரமம் தவறாத உடற்பயிற்சி
2. உடற்தூய்மை, சுற்றாடற்தூய்மை
3. புகைப்பாவனைத் தடை
4. மதுப்பாவனைத் தடை
5. தகாத பாலியல் உறவுகளைத் தவிர்க்க ஆலோசனை
6. கொழுப்பு, மாப்பொருட் பண்டங்களைத் தவிர்ப்பதற்கு ஆலோசனை
7. புரத, நார்த்தன்மை உணவுகளை உட்கொள் ஊக்குவிப்பு
8. மெல்லிய சூரிய ஒளியில் உடற்பயிற்சி நடைப்பயிற்சிக்கும் ஆலோசனை
9. சுவாசப்பயிற்சி, மன அமைதிக்கான வழிமுறைகள்
10. சீரான வாழ்வுமுறையைப் பின்பற்றல்

என பல நல்ல நடைமுறைகளை அறிவுறுத்தி மக்களை நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், கிருமித்தொற்று, மன அழுத்தம், கொலஸ்ரோல் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு போற்றவற்றிலிருந்து தப்பு வதற்கு வழிகாட்டுகின்றது.

இந்துமதத்தில் தினமும் அதிகாலையில் எழுந்து, குளிர்ந்த நீரில் குளத்து, தோய்த்துலர்ந்த ஆடைஅணிந்து கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்றும் கோபுரத்தைக் கண்டவுடன் கைகள் இரண்டையும் தலைமேல் கூப்பி வணங்கியவாறு உட்செல்ல வேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

கோயிலை வலம்வருதல், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல், விரதகாலங்களில் மாப்பொருள் தவிர்த்தல், பஞ்சபாதகம் தவிர்த்தல், புலனடக்கம் என்று இன்னோர்கள் செயற்பாடுகள் அறிவுறுத் தப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது ஒரு குழந்தை பிறப்பு முதல் வாழும் காலங்களில் பல்வேறு வயதுகளில் பூர்வக்கிரியைகள் என்று சொல்லப் படுகின்ற பல கிரியைகளோடு இணைந்த வாழ்வியல் முறையையும் வாழக்கூடியதாக இந்துமதம் வழிகாட்டியுள்ளது.

இச்செயல முறையில் உடற்சுத்தம், உடற்பயிற்சி என்பவை இயல் பாகவே மனித செயற்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது விரதகாலத்தில் பால், பழம் உண்ணும் வழக்கம் வினைத்திறன் கூடிய புரத, விற்றமின்களும், நார்ப்பொருளும் அதிகளவில் இருக்கும் நிறை உணவாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல சூரிய நமஸ்காரம் என்பது எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமான ஒன்றாகும். இன்று மருத்துவரீதியாக சூரியக்குவியல் என்பது பல எலும்பு சம்பந்தமான நோய்களைத் தடுக்கின்றது என்று நிரூபித்துள்ளார்கள்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்துவரும் யோகாப் பயிற்சி முறையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சித்தர்களே. அதேபோல் கடவுளை பக்தியுடன் மனமுருகி, மனம் ஒருமித்து தியானித்து வழிபடும் முறை அன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றது. இதனையே இன்றைய மருத்துவ உலகு சிபாரிசு செய்து வருகின்றது. "மெடிட்டேசன்", "சுவாசப்பயிற்சி" என்பன மருத்துவ முறையாகின்றன.

உளவளத்துணை (Counseling) என்று சொல்லப்படுகின்ற சிகிச்சை முறை இன்று பிரபல்யம் அடைந்து வருகின்றது. மன அழுத்தம் அல்லது மனக்கஷ்டத்திற்கு உட்பட்ட ஒருவர் Counseling ஒருவரை நாடி, தனது உள்ளக்கிடைக்கைகளை வெளிப்படுத்தி, தெளிவு பெறுகின்றனர். தனது பிரச்சினைக்குத் தானாகவே தீர்வுகண்டு, தீர்மானம் எடுக்கும் நிலைக்கு அவரை மீட்டெடுப்பதே உளவளத்துணையாகும்.

இவ்வாறே வேதப்பாடல்களிலிருந்தும் திருமுறைகளிலிருந்தும், ஒருவனுக்கு கடுமையான மனச்சுமை மன அழுத்தம் ஏற்படும் பொழுது அது சம்பந்தமாக இறைவனிடம் முறையிட்டு அழும் மரபு இருந்ததை அறிகிறோம். மனச்சுமைகளை இறைவனிடம் பாரப்படுத்தி "இறைவன் விட்ட வழி" என்று மனதைத் திடப்படுத்தி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவது மதம் காட்டிய வழி. இறைவனும் Counseiling போன்று தன்னை நாடி வரும் அன்பர்கள் பக்தர்களின் இரகசியத்தன்மை பேறும் நம்பகத்தன்மை வாய்ந்த மருத்துவராக விளங்குகின்றார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே.**

என திருமூலர் மனிதனையே கோயிலாகச் சித்தரித்து ஒருவரின் உடலும் உள்ளமுந்தான் சிறப்பாகப் பராமரிக்க வேண்டிய ஆலயங்கள் என்பதனைச்சுட்டியுள்ளார்.

எந்த மருத்துவம் சிறந்தது என்பது முக்கியமல்ல. மனிதன் சுகப்பட வேண்டும் என்பதே முக்கியமானதாகும். அதேபோல் எந்த மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது என்பது முக்கியமல்ல. மனிதன் நல்வழிப்பட வேண்டும் என்பதே முக்கியமானது. உடல், உள்ளம் ஆகிய இரண்டும் செம்மைப்படுத்துவதற்கு மதம், மருத்துவம் இரண்டும் இரு கண்கள் போல விளங்குகின்றன. மதக்கோட்பாடுகளும் மருத்துவ விஞ்ஞானக் கோட்பாடுகளும் இரு வேறு துருவங்கள் என்ற வண்ணம் மாற்றம் பெறவேண்டும். ஆலயங்கள் ஆரம்பத்தில் மருத்துவ நிலையங்களாக செயற்பட்டமையையும் நாம் வரலாற்று நூல்கள் வாயிலாக அறிந்துள்ளோம். மனச் சோர்வும் மன அழுத்தங்களும் எம் மனதை ஆக்கிரமிக்கும் பொழுது மதநம்பிக்கைதான் எமக்குக் கைகொடுக்கும். அவ்வாறான வேளையில் ஆலயங்கள் தான் தஞ்சம் என்று செல்கின்றோம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஆலய நிர்வாகிகள், அந்தணசிவாச்சாரியார்கள் ஆகியோரின் செயற்பாடுகளும் உகந்ததாக இருக்குமேயானால் மன நோயாளி என்ற வர்க்கமே அழிந்துபோகும். ஒருவனுக்கு அன்பையும் பரிவையும் நலத்தையும் வழங்குவதில் மதமும் மருத்துவமும் ஒன்றுபடுகின்றன.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
அருவமும் உருவுமாகி அநாதயாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாய்
கருணைகூர் முகம் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட
ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய.

**பவானி முகுந்தன்,**
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உள்ளத்திலிருந்து....

எங்கள் குடும்ப பாசப் பிணைப்பில், அன்பின் விருட்சமாகவும்
கருணைப் பெருங்கடலாகவும் விளங்கிய எமது பிரிவிலா சகோதரி

## நிர்மலாதேவி (மலர், மலரக்கா)

- சென்ற செப்ரம்பர் 10ம் திகதி அம்பாள் பாதமடைந்த செய்தி கேட்டு, அறிந்து, உணர்ந்து:...
- உள்ளூரில், வெளியூரிலும் தொலைபேசி, மின்னஞ்சல், முகப்புத்தகம் மற்றும் தொடர்புசாதனங்கள் மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும்
- எமது இல்லத்தில் நேரில் வருகை தந்து ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தி ஆறுதல்தளித்தவர்களுக்கும்,
- அதற்கு முன் பின் நடைபெற்ற ஆகமக் சடங்குகளில் உதவியவர் களுக்கும் அன்னாரது இறுதிக் கிரியைகளிலும் சிறப்புற நடாத்து வதற்கு உதவியவர்களுக்கும்
- இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு தகனக்கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் மலர்மாலை வழங்கி மலரஞ்சலி செலுத்தி யோருக்கும்
- அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மா சாந்திப் பிராத்தனைகளிலும் கலந்துகொண்டோருக்கும் மற்றும்

அனைத்து வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும்
எமது உளமார்ந்த நன்றியையும் கடமை உணர்வுகளையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
மீண்டும் எமது நன்றிகள்

குடும்பத்தினர்.
"மநு இல்லம்"
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

10.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிச் செல்வம்



ஓம் என்ற மந்திரத்தைத் தியானம் செய்வதால் எல்லா ஆன்மீகத் தடைகளும் நீங்கி ஆன்மா விழிப்படையும் என வேத வியாசர் யோக சூத்திரத்தில் கூறுகிறார்.

ஓம் கார தியானம் உருவ வழிபாடு, அருவ வழிபாடு ஆகிய இரண்டிலும் சமமாக இடம்பெறும் அனைத்து மந்திரங்களுக்கும் மூலம் பிரணவ மந்திரம் ஆகும். மகா வாக்கியங்கள் அனைத்தும் ஓங்காரத்தில் அடக்கம். ஓம் என்ற பிரணவத்தில் ஆரம்பித்தே வேதம் கானம் செய்யப்படுகிறது. ஓசை காதில் கேட்கிறது. காதின் வடிவம் ஓ என்பது போல அமைந்திருக்கிறது. ஓசை நாதம் என்று பொருள்படுகிறது. நாதம் உலகத் தோற்றத்தின் ஆதி காரணமாக இருக்கிறது. ஓம் என்ற சொல்லின் வடிவும் பொருளும் தமிழ் மொழியில் மட்டுமே பொருந்தி வருகிறது.

ஓம் என்னும் பிரணம் படைத்து, காத்து, அழிக்கவல்ல தலைவன் என்பதே ஓங்காரத்தின் பொருள் என திருவருட்பா விளக்குகிறது. சைவர் எந்நேரமும் ஓம் என்றே சொல்லுவார்கள். பிரணமந்திரம், மூலமந்திரம், ஆதிமந்திரம், அகாரமந்திரம் என்றும் பலவாறாகக் கூறப்படுகிறது.

ஓம்கார மந்திரமான ஓம் நாம் எந்தச் செயலைச் செய்துகொண்டிருந்தாலும் மனதிற்குள் ஓம் சொல்லிக்கொண்டிருந்தால் சிறப்பாகும். ஓம் ஓம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் மனதில் உறுதியும் உற்சாகமும் இறை அருளும் கிடைக்கும். இரத்தத்தில் உள்ள நச்சுத்தன்மை குறையும். இந்த மந்திரம் மூலாதாரத்தை வலுப்படுத்தும். காலம், நேரம், இடம் தேவை இல்லை. பயணம் செய்யும் போதும் ஓய்வு கிடைக்கும் நேரங்களிலும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கலாம். இதனால் ஆன்மீக பலம் வலுவடையும். மனோ தைரியம் பெருகும். எதனையும் எதிர்கொள்ளும் ஆற்றல் வளர்ச்சி பெறும். முக வசிகரம் உண்டாகும். எடுத்த காரியம் எதிலும் வெற்றி பெறும். எந்தத்தடையும் ஓம் பெற்றுத்தரும்.

ஓம் மந்திரத்தை மனதுக்குள் கேட்கும் மனதுக்குள்ளேயே மிக எளிய முறையாகும். ஆகையால் ஓம் என்னும் மந்திரத்தை உச்சரித்து ஆன்மீகத்தை வளர்த்து நன்மை பெறுவோம்.

ஓம் நமசிவாய / ஓம் சக்தி / ஓம் முருகா / ஹரி ஓம் நாராயணா /
ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதரன் பிறின்டேர்ஸ் - வழக்கம்பரை. ☎ 0779204165